بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *03/05/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**☆ உஹுது போர் மற்றும் ஹம்ராஅல் அஸது போர் தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை குறிப்புகள்**
**☆ உலகின் சூழ்நிலைகள் மற்றும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் உடல் நலத்திற்காக துஆக்களுக்கான கவனமூட்டல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹம்ராஅல் அஸத் போர் தொடர்பாக கூறப்பட்டு வந்தது. **உஹுது போரிலிருந்து மதீனாவுக்குத் திரும்புதல் மற்றும் ஹம்ராஅல் அஸத் போர் ஆகியவை தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் கூறியதை நான் எடுத்துரைக்கிறேன். அன்னார் கூறுகிறார்கள்:** உஹுது போரிலிருந்து திரும்பிய பிறகு, வந்த இரவு மிக அச்சுறுத்தும் இரவாக இருந்தது. ஏனென்றால் வெளிப்படையில் குரைஷிய படை மக்காவை நோக்கி சென்று கொண்டிருந்தது. ஆனால் அவர்களின் இந்த நடவடிக்கை முஸ்லிம்களை கவனமற்றவர்களாக ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்து விடக்கூடாதே என்ற அச்சம் இருந்தது! ஆகவே அந்த இரவில் மதீனாவில் காவலுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டை முழு இரவும் சஹாபிகள் காவல் காத்துக் கொண்டிருந்தனர்.

காலை விடிந்த போது இந்த அச்சம் வெறும் கற்பனையல்ல என்பது தெரியவந்தது. ஏனென்றால் ஃபஜ்ர் தொழுகைக்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு குரைஷியப்படை மதீனாவில் இருந்து கொஞ்சம் தூரம் சென்று நின்று விட்டது என்றும், ‘நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்யவும் இல்லை; முஸ்லிம் பெண்களை அடிமைகளாக்கவும் இல்லை; முஸ்லிம்களின் செல்வத்தையும் பொருட்களையும் கைப்பற்றவும் இல்லை; மாறாக, நீங்கள் அவர்களை மிகைத்த போது, அவர்களை முற்றிலும் அழிக்கக்கூடிய சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைத்திருந்தது! அவர்கள் மீண்டும் வலுவாக வளரும் வண்ணம் நீங்கள் அவர்களை அப்படியே விட்டுவிட்டு திரும்ப வந்து விட்டீர்கள்! ஆகவே இப்பொழுதும் வாய்ப்பு உள்ளது. திரும்பி செல்லுங்கள். மதீனாவின் மீது தாக்குதல் நடத்தி முஸ்லிம்களின் வேரை வெட்டி வீழ்த்துங்கள்’ என்று குரைஷிய தலைவர்களுக்குள் விவாதம் நடந்து கொண்டிருப்பதாக அன்னாருக்குத் தகவல் கிடைத்தது. இதற்கு எதிராக மற்றவர்கள் என்ன கூறினார்கள் என்றால், உங்களுக்கு

ஒரு வெற்றி கிடைத்துள்ளது! அதை போதுமானதாகக் கருதுங்கள்; திரும்பிச் சென்று விடுங்கள். இந்த வெற்றியும் தோல்வியாக மாறிவிட வேண்டாம்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்தத் தகவல் கிடைத்தபோது, உடனடியாக புறப்படும்படி அறிவித்தார்கள். அத்துடன், உஹுது போரில் கலந்து கொண்ட மக்களைத் தவிர வேறு எவரும் நம்முடன் புறப்பட வேண்டாம் என்றும் அன்னார் கட்டளையிட்டார்கள். உஹுது போரில் கலந்து கொண்ட போராளிகள் தம்முடைய காயங்களுக்குக் கட்டுப் போட்டுவிட்டு தம் எஜமானருடன் புறப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் 8 மைல் தூர பயணத்தைக் கடந்து ஹம்ராஅல் அஸத் ஐ வந்தடைந்த போது அங்கு பல்வேறு இடங்களில் தீமூட்டுமாறு அன்னார் கட்டளையிட்டார்கள்.

உடனடியாக 500 நெருப்புகள் மூட்டப்பட்டு விட்டன. இங்குதான் மஅபத் என்ற முஷ்ரிக் தலைவர் பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்தார். அவர் தம் வழியில் புறப்பட்டுச் செல்லும்போது அபூசுஃப்யான் மற்றும் இதர தலைவர்களைக் கண்டபோது தம் பேச்சால் அவர்களைத் துணிவிழக்கச் செய்தார். மஅபத் உடைய பேச்சு எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அவர்கள் மதீனாவின் மீது தாக்குதல் நடத்தும் எண்ணத்தை கை விட்டு விட்டு மக்காவை நோக்கி திரும்பினர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹம்ரா அல் அஸத் -ல் இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள். ஐந்து நாட்களுக்குப் பிறகு மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள். உஹுது போரின் முடிவைக் குறித்து நீண்ட விவாதங்கள் நடைபெற்றுள்ளன. சில வரலாற்று ஆசிரியர்கள் உஹுது போரை தோல்வி என்று விளக்கம் கொடுத்துள்ளனர். சிலர் இதை வெற்றி எனக் கூறுவதிலிருந்து பொதுவாக தவிர்ந்து கொள்கின்றனர்; இரண்டுக்கும் இடைப்பட்டதாக தமது கருத்தை வைக்கின்றனர். சிலர் எவ்வாறு உள்ளார்கள் என்றால், ஒரு தோல்விக்குப் பிறகு கிடைத்த வெற்றி என்று விளக்கம் கொடுக்கின்றனர். ஆனால் உண்மை நிலவரம் என்னவென்றால், அக்காலத்து போர் சட்டங்கள், மரபுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது, முஸ்லிம்களுக்கு உஹுது களத்தில் தோல்வி ஏற்பட்டது என்று கூற முடியாது! ஏனென்றால், அபூ சுஃப்யான் அவர்கள் வெறும் முழக்கங்களை இட்டவாறு தம் படையை அழைத்துக் கொண்டு உஹுது மைதானத்தை விட்டு மக்காவை நோக்கி புறப்பட்டு சென்று கொண்டிருந்த நேரத்திலும் கூட முஸ்லிம்கள் போர்க்களத்தில்தான் இருந்தார்கள். இன்றைய நாள் பத்ர் நாளுக்கான பழிவாங்கல் ஆகும் என்று அவர் வெற்று முழக்கங்களையும் கூறிக் கொண்டிருந்தார். இது பத்ர் போருக்கான பழிவாங்கலாக எப்படி ஆக முடியும்? பத்ர் போரிலோ காஃபிர்களின் பெரும் பெரும் தலைவர்களை முஸ்லிம்கள் கொன்று விட்டார்கள்; அவர்களின் 70 நபர்கள் சிறைபிடிக்கப்பட்டார்கள்; ஒரு பெரும் போர்ச் செல்வம் முஸ்லிம்களுக்குக் கிடைத்தது; முஸ்லிம்கள் மரபுகளுக்கு ஏற்ப மூன்று நாட்கள் பத்ர் -ல் தங்கி இருந்தார்கள். ஆனால் உஹுது நாளில் இவற்றில் எதுவும் காஃபிர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே இது பத்ருடைய பழிவாங்கலாக எவ்வாறு ஆக முடியும்? ஆனால் உஹுது நாளில் முதல் நிலையில் வெற்றிக்குப் பிறகு இரண்டாவது நிலையில் முஸ்லிம்களுக்கு கடும் உயிர்ச்சேதம் ஏற்பட்டது உண்மைதான்!

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** நிரந்தர விளைவின் அடிப்படையில் பார்க்கும்போது, பத்ர் போருக்கு முன்னால் உஹுது போருக்கு எவ்வித முக்கியத்துவமும் கிடையாது. ஆனால், நிச்சயமாக இந்தப் போர் முஸ்லிம்களுக்கு சில வகையில் தற்காலிகமாக பாதிப்பை ஏற்படுத்தியது

உண்மைதான்! முதலாவதாக, முஸ்லிம்களுடைய 70 நபர்கள் ஷஹீதாகி போனார்கள். அவர்களுள் சிலர் பெரும் சஹாபிகளும் ஆவார்கள். காயமுற்றவர்களின் எண்ணிக்கையோ மிக அதிகமாக இருந்தது. இரண்டாவது, மதீனாவின் யூதர்களும் முனாஃபிக்களும் பத்ர் போரின் விளைவாக கொஞ்சம் தாக்கத்திற்குள்ளாகி இருந்தனர். இப்போது அவர்களுக்கு கொஞ்சம் துணிவு உருவாகி இருந்தது. மூன்றாவது, மக்கத்து குரைஷியர்களுக்கு மிகவும் துணிவு ஏற்பட்டுவிட்டது. தாம் பத்ர் போருக்காக பழிக்குப்பழி வாங்கியது மட்டுமின்றி, இனிமேலும் படையைத் திரட்டிக் கொண்டு தாக்குதல் தொடுத்தால் முஸ்லிம்களை அடிபணிய வைத்துவிடலாம் என்று அவர்கள் தம் உள்ளத்தில் நினைத்துக் கொண்டனர். நான்காவது, அரேபிய கோத்திரங்களும் கூட பொதுவாக உஹுது போருக்குப் பிறகு அதிக துணிவு கொண்டு தலை தூக்க ஆரம்பித்தன. ஆனால் இந்த நஷ்டங்கள் இருந்த போதிலும் ஒரு தெளிவான உண்மையை மறுக்க முடியாது! அது என்னவென்றால், பத்ர் போர் குரைஷியர்களுக்கு எந்த அளவு நஷ்டத்தை ஏற்படுத்தியதோ அதை உஹுது போரின் வெற்றியால் ஈடு கட்ட முடியாதிருந்தது!

உஹுது போரின் பாதிப்பும் கூட முஸ்லிம்களுக்கு ஒரு வகையில் மிகவும் பயனைக் கொடுத்தது. ஏனென்றால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் விருப்பத்திற்கும், வழிகாட்டலுக்கும் எதிராக நடப்பது ஒருபோதும் வெற்றியையும் நலனையும் தராது என்பது முஸ்லிம்களுக்குத் தெள்ளத்தெளிவாக தெரிந்து விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருக்கலாம் என்று ஆலோசனை கொடுத்து, அது தொடர்பாக தமது ஒரு கனவையும் எடுத்துக் கூறினார்கள். ஆனால் வெளியே சென்று போரிட வேண்டும் என்று மக்கள் பிடிவாதம் பிடித்தனர். பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களை உஹுதுடைய ஒரு குன்றின் மேல் நியமித்திருந்தார்கள். என்ன நிகழ்ந்தாலும் சரி இந்த இடத்தை விட்டுவிடக்கூடாது என்று மிகவும் வலியுறுத்திக் கூறியிருந்தார்கள். ஆனால் அவர்கள் போதும் என்று கருதி அந்த இடத்தை விட்டுவிட்டு கீழே இறக்கி விட்டார்கள். ஆகவே உஹுது போரின் நஷ்டம் ஒருவிதத்தில் துன்பமாக இருந்தது என்றால் இன்னொரு விதத்தில் அது முஸ்லிம்களுக்கு ஒரு நல்ல படிப்பினையைத் தரக்கூடியதாக ஆகியிருந்தது.

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஒரு சொற்பொழிவில் உஹுது போருக்குப் பிறகு உள்ள சம்பவங்களை ஆய்வு செய்தவாறு அதனுடைய சில அம்சங்களை எடுத்துக் கூறினார்கள்:** (1) முஸ்லிம்களிடத்தில் இருந்து தோல்வியின் உணர்வை முற்றிலும் துடைத்தெறிவதற்கு இதைவிட மிகச் சிறந்த நடவடிக்கை சாத்தியம் இல்லாததாக இருந்தது. (2) புத்துணர்ச்சி கொண்ட இளைஞர்களையும், புதிய போராளிகளையும் அழைத்துச் செல்வதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்காமல், உண்மையான நம்பிக்கை தம் இறைவன் மீதே இருந்தது என்பதை அன்னார் தெளிவாக நிரூபித்து விட்டார்கள். (3) எந்த சஹாபிகளின் பாதங்கள் உஹுது போர்க்களத்தில் தடுமாறி விட்டனவோ அவர்கள் மீது அன்னார் முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள். இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் தம் சஹாபிகளுக்கு ஊக்கமளித்தார்கள்.

(4) பெருமானார் (ஸல்) அவர்களின் 100 சதவீத நம்பிக்கை சரியானதாக இருந்தது! அது எந்தவோர் உணர்ச்சிக்கும் உட்பட்டு எடுத்த முடிவாக இருக்கவில்லை. ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் உஹுது போருக்கு அடுத்த நாளிலேயே எதிரியைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டும் என முடிவெடுத்தது தம் தோழர்கள் மீது அவர்கள் செய்த பேருபகாரமாகும். ஏனென்றால்

அவர்களுடைய காயமடைந்த பங்களிப்பை ஒரே நொடியில் முழுமையான முறையில் குணமாக்கியது போன்று எந்த ஒரு தளபதியும் ஒருபோதும் தன் படையின் மீது இவ்வாறான உபகாரம் செய்ததில்லை. اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

(5) பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டது வெறும் உணர்ச்சிக்கு உட்பட்டு செய்யப்பட்டது கிடையாது! மாறாக போர் நுட்பத்தின் அடிப்படையில் பார்க்கும்போதும் அது மிகவும் பயன்தரக் கூடியதாக நிரூபணமானது. பெருமானார் (ஸல்) அவர்கள் தமது ஞானம் மற்றும் திட்டத்தின் விளைவால் பல மாபெரும் பயன்களை அடைந்தார்கள்.

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:** பெருமானார் (ஸல்) அவர்களுடைய போர்களையெல்லாம் பார்க்கும்போது, அன்னாருடைய அழகிய நிகரற்ற ஆற்றல்களின் மீதும் வியத்தகு ஒளி விழுகிறது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களின் ஆரம்பமும் இறுதியும் ஒரு திறமை பெற்ற படைத்தளபதி என்ற வகையில் (மட்டுமே) இருக்கவில்லை! மாறாக ஒழுக்க ரீதியாகவும், ஆன்மிக ரீதியாகவும் ஒரு தலைவராக இருந்தார்கள். அன்னாருடைய கைகளில் அழகிய நல்லொழுக்கங்கள் எனும் கொடி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது மிக முக்கிய விஷயமாகும். உயரிய நல்லொழுக்கத்தின் கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, அதை மேலோங்கச் செய்தவாறு எப்படிப்பட்ட மாபெரும் ஜிஹாதில் அன்னார் மூழ்கி விட்டார்கள் என்றால், அது ஒருபோதும் முடிவடையாத போராட்டமாக இருந்தது. போர் சூழ்நிலையில் எவ்வாறு அது தொடர்த்து கொண்டிருந்ததோ அவ்வாறே அமைதியான சூழ்நிலையிலும் அது தொடர்ந்து கொண்டிருந்தது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** உஹுது போர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மைக்கு ஒரு மாபெரும் அடையாளமாக இருந்தது. இந்தப் போரில் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கேற்ப முஸ்லிம்களுக்கு முதலில் வெற்றி கிடைத்தது. பிறகு அன்னாரின் முன்னறிவிப்புக்கேற்ப அன்னாருடைய அன்பிற்குரிய தந்தையின் சகோதரர் போரில் கொல்லப்பட்டார்கள். பிறகு அன்னாரின் முன்னறிவிப்புக்கேற்ப ஆரம்ப தாக்குதலில் காஃபிர்களுடைய படையின் கொடியைப் பிடித்தவர் கொல்லப்பட்டார். பிறகு அன்னாரின் முன்னறிவிப்புக்கேற்ப அன்னாரும் காயமடைந்தார்கள்; பல சஹாபிகளும் ஷஹீதானார்கள். அதுமட்டுமின்றி முஸ்லிம்களுக்கு எவ்வாறான கலப்பற்ற தன்மையையும், ஈமானையும் வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது என்றால், அது போன்ற உதாரணம் வரலாற்றில் எங்குமே காணக் கிடைக்காது!

**உஹுது போருக்குப் பிறகு உடனடியாக நிகழ்ந்த சம்பவங்களும், ஹம்ரா அல் அஸத் போர் குறிப்பும் இங்கு நிறைவு பெறுகின்றன!**

உலகின் சூழ்நிலைகளைக் குறித்தும், முஸ்லிம்களுடைய சூழ்நிலைகள் மற்றும் பாலஸ்தீனம் குறித்தும் துஆவுக்காக நான் கவனமூட்டி வருகின்றேன். கொஞ்ச காலத்திற்காக போர் நிறுத்தம் ஏற்பட்டு விடும் என்று சில பகுதிகளில் கருதப்படுகின்றது. ஆனால் சூழ்நிலைகளைப் பார்க்கும் போது அவ்வாறு நிகழ்ந்துவிட்டாலும் கூட பாலஸ்தீனர்கள் மீதான அநீதி முடிவுக்கு வராது என்றே தோன்றுகிறது. ஆகவே அதிக துஆக்களுடைய தேவை உள்ளது! அல்லாஹ்வின் பக்கம் குனியக்கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் பாலஸ்தீனர்களுக்கும் வழங்குவானாக!

எவ்வாறு இருப்பினும், இந்த சூழ்நிலைகளில் ஆணவம் கொண்டோரின் ஆணவத்தை உடைப்பதற்கான ஏற்பாட்டையும் அல்லாஹ் உருவாக்கி விட்டதாக தெரிகிறது. இந்தப் பணி எப்பொழுது முழுமை பெறும் என்பதை அல்லாஹ்வே நன்கு அறிவான். ஆனால் எவ்வாறு இருப்பினும், அவர்களின் இந்த ஆணவம் இப்பொழுது உடைய ஆரம்பித்து விட்டது. அவர்களுக்குள்ளே அவர்களின் எதிர்ப்பாளர்கள் உருவாக ஆரம்பித்து விட்டார்கள். அமெரிக்காவிலும் எதிர்ப்புக் குரல் எழ ஆரம்பித்து விட்டது. எதிர்ப்புக் குரலை அடக்குவதற்கு இப்பொழுது ஆற்றலைப் பயன்படுத்த ஆரம்பித்து விட்டனர். ஆனால் அவ்வாறிருந்தும் இந்தப் பிழம்புகள் கொழுந்து விட்டெரியும்! தற்காலிகமாக இது நின்று விட்டாலும் பிறகு கொழுந்து விட்டெரியும். அல்லாஹ் உலகின் பெரும் சக்திகளுக்கு அறிவை வழங்குவானாக! அவர்கள் நீதியுடன் நடந்து கொள்வார்களாக! தமக்கென்று ஒரு நீதி; மற்றவர்களுக்கென்று இன்னொன்று! இந்த விஷயம்தான் பிறகு ஒரு நேரத்தில் ஐ.நா உடைவதற்கும் காரணியாக அமைந்து விடும்!

பிறகு இரண்டாவதாக, துஆவுக்காக நான் கூற விரும்புவது என்னைப் பற்றியதாகும். **நீண்ட காலமாக எனக்கு இதய வால்வு பிரச்சினை இருந்தது. இதற்கான மருத்துவ செயல்முறையை ஆரம்பிக்கலாம் என்று மருத்துவர்கள் கூறிக் கொண்டிருந்தனர். ஆனால் நான் காலம் தாழ்த்தி வந்தேன். ஆனால் மேற்கொண்டு காலம் தாழ்த்துவது பொருத்தமானதல்ல! அவ்வாறான நிலை வந்துவிட்டது என்று மருத்துவர்கள் கூறினார்கள். ஆகவே அவர்கள் கூறியதற்கிணங்க கடந்த நாட்களில் இதய வால்வு மாற்றம் செய்வதற்கான மருத்துவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்; சரியாகிவிட்டது! ஆகவே மருத்துவர்களுடைய வழிகாட்டல்களுக்கு ஏற்ப நான் சில நாட்கள் பள்ளிவாசலுக்கும் வர இயலவில்லை. அல்லாஹ்வின் அருளால், மருத்துவ ரீதியாக என்ன செயல் நடவடிக்கை எடுக்க முடிந்ததோ அது வெற்றி பெற்று விட்டதாக மருத்துவர்கள் கூறியுள்ளார்கள்.**

**அல்லாஹ் எந்த அளவு வாழ்வை வழங்க இருக்கிறானோ அது நன்கு பணியாற்றக்கூடிய வாழ்வாக அமைய துஆ செய்யுங்கள்.**

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰی وَيَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْیِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**